**அசல் வழக்கு எண். 48/2013** **தேதி-01.08.2025**

**வா.சா. 2- அயினான் (எ) அய்யனார்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. காத்தான் எனது தந்தை ஆவார். தெய்வாணை எனது தாயார் ஆவார். காத்தான் மற்றும் தெய்வாணை ஆகியோருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 மகன்கள் மற்றும் 4 மகள்கள் உள்ளனர். எனது தந்தை மற்றும் தாயார் எப்போது இறந்தார்கள் என்றால் தேதி சரியாக நியாபகம் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது அண்ணன் மாரியப்பன் எப்போது இறந்தார் என்றால் நியாபகம் இல்லை.

2. மாரியப்பன் மகன் இரவி என்கிற இரவிக்குமார் என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்றால் நியாபகம் இல்லை. தாவா வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் மாரியப்பனின் வாரிசுக்ள் வன்னிமுத்து மீது தாக்கல் செய்துள்ள வழக்காகும். மாரியப்பன் உயிருடன் இருந்த காலத்தில் குளித்தலைக்கு வந்துவிட்டனர் என்றால்சரிதான. மாரியப்பன் குளித்தலைக்கு வந்து சுமார் 40 வருடங்கள் இருக்குமா என்றால் அதற்கும் அதிகமாக இருக்கும். என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைத்து வந்தது யார் என்றால் 4 ம் வாதி தான் அழைத்தார். எனது பிறந்த தேதி தெரியுமா என்றால் நியாபகம் இல்லை.

3. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் நியாபகம் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் குத்தகை நிலமாகும். தாவா சொத்தின் உரிமையாளர் யார் என்றால் எனது தந்தையின் காலத்தில் குத்தகைக்கு பெறப்பட்ட நிலம் என்பதால் அதன் உரிமையாளர் பெயர் தெரியவில்லை. குத்தகைக்கு பெறப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 3 நபர்களுக்கு தலா 42 சென்ட் ஆகும். நான் கடைசியாக எப்போது நிலத்தின் உரிமையாளருக்கு குத்தகை பணம் செலுத்தினேன் என்றால் கடந்த 10 வருடமாக குத்தகை பணம் செலுத்தவில்லை.

4. அதற்கு முன்பு குத்தகை பணம் கொடுத்தோமா என்றால் எனது தந்தையின் காலத்தில் கொடுத்தார். எனது தந்தை இறந்த பிறகு நான் குத்தகை செலுத்தினேனா என்றால் செலுத்தியுள்ளேன். அதற்கான வாய்தா இரசீதுகள் யாரிடம் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி வன்னிமுத்துவிடம் உள்ளது. கடைசியாக நான் செலுத்திய குத்தகை தொகை எவ்வளவு என்றால் ஏக்கருக்கு 4 கலம் நெல் என்ற வீதம்

செலுத்தினேன். நான் எவ்வளவு செலுத்தினேன் என்றால் 2 ½ கலம் செலுத்தினேன். தாவா சொத்து பொறுத்து எழுத்து மூலமாக ஏற்படுத்தப்பட்டதாக சொல்லும் ஆவணமானது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி எழுத்து மூலமாக ஏற்பட்ட ஆவணம் ஏற்பட்ட தேதி தெரியுமா என்றால் நியாபகம் இல்லை.

5. தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் மேல் நங்கவரத்தில் உள்ளது. எனது வாக்குமூலத்தில் மேற்படி குத்தகை நிலத்தை சரிபாதியாக பிரித்து அனுபவம் செய்வதாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதியும் முதலில் சரிபாதியாக பிரித்து கொண்டோம். மாற்றி பிரித்து கொண்டதாக சொல்வது யாருக்கிடையில் பிரித்துக்கொண்டோம் என்றால் மாரியப்பனின் மகன் இரவிகுமார், நான் மற்றும் வன்னிமுத்து ஆகியோருக்கிடையில் மீண்டும் பிரித்துக் கொண்டோம். மேற்கண்ட இரவிகுமார் நில உரிமையாளருக்கு குத்தகை செலுத்தியுள்ளாரா என்றால் இல்லை.

6. நானும், 1ம் பிரதிவாதியும் பிரித்துக்கொண்டதின் அடிப்படையில் எங்கள் பெயரில் உரிமையாளருக்கு குத்தகை செலுத்தி இரசீது பெற்றுள்ளோம். மேற்படி எழுத்து மூலமாக ஏற்படுத்தியதாக சொன்ன ஆவணத்தில் இரவிக்குமாரும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதியும் பிரித்துக்கொண்டதில் வடபுற பாதி 59 சென்ட் எனக்கும், தென்புற பாதி 59 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதிக்கும் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். தாவா 2ம் அயிட்ட சொத்தான வீட்டுமனையின் விஸ்தீரனம் என்ன என்றால் 12 சென்ட் ஆகும். மேற்படி 12 சென்ட்டில் வடபுற 6 சென்ட் எனக்கும், தென்புற 6 சென்ட் 1ம் பிரதிவாதிக்கும் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

7. எனக்கும், இரவிக்குமாருக்கும் மற்றும் 1ம் பிரதிவாதி தலா 4 சென்ட் நிலம் மேற்படி வீட்டு மனை பிரிக்கப்பட்டது. மேற்படி வீட்டுமனைக்கு தெற்கே தேசிய நெடுஞ்சாலை உள்ளது. கிழக்கே கருப்பன் நிலம் உள்ளது. மேற்கே ராஜலிங்கம் நிலம் உள்ளது. தெற்கே கிழமேல் வீதி உள்ளது. 1ம் பிரதிவாதியின் ஓட்டுவீடா என்றால் முதலில் கூரை வீடாக இருந்தது. தற்போது ஓட்டுவிடாக உள்ளது. அவரின் வீடு தெற்கே பார்த்து உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வன்னிமுத்துவிற்கு பெரியசாமி மற்றும் ஜகநாதன் என்ற இரு மகன்கள் உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு வீட்டு வரி இரசீது பெரியசாமி மற்றும் ஜகநாதன் பெயரில் உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை.

8. 1ம் பிரதிவாதி அவரது பங்கை அவரது மகன்களுக்கு பத்திரம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 12 சென்ட்டில் வடபுறம் காலி இடமாக தான் உள்ளது என்றல் சரிதான். மொத்தம் 12 சென்ட்டில் தெற்கே 6 சென்ட் 1ம் பிரதிவாதிக்கும் வடக்கே 6 சென்ட் எனக்கும் பிரிக்கப்பட்டது என்றும், அதனை மறைத்து 4 சென்ட் நிலம் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும், இரவிக்குமாருக்கும் பாத்தியப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் சொத்தை பொறுத்து எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும், வாதிகள் குடும்பத்திற்கும் எழுத்து பூர்வ ஆவணங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும், அதில் சாட்சிகள் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எவ்வளவு காலமாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் நாங்கள் பேசிக்கொள்வோம். 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் 15 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றும், அதனால் தான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது தான் 1ம் பிரதிவாதியுடன் நிலத்து பிரச்சனை காரணமாக பேச்சுவார்த்தை இல்லை. தாவா சொத்தை வாதிகள் அனுபவம் செய்வதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**